பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை: சதம் 7-

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8174


# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 14 றம்ழான் 26 இதழ் 165
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-7-1981


யாழ் நகரில்
தமிழ், சிங்கள படங்களை
தொலைக்காட்சியில் விரைவில்
பார்க்கலாம்.
எரியல் போடத் தேவையான
ஜி. ஐ. பைப்புகளுக்கு
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

★ ஆனைக்கோட்டையில் நிகழ்ந்த திகில் சம்பவம்!

# பொலிஸ் நிலையம் முற்றுகை!
# 17 றைபிள், சன்னம் கொள்ளை!

## ஒரு கான்ஸ்டபிள் பலி; மூவர் பலத்த காயம்

### ஆயுதக் கோஷ்டி மினிபஸ்ஸை கடத்தி பொலிஸ் நிலையத்தைத் தாக்கியது!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் நேற்று அதிகாலை ஒருமணியளவில் சுமார் பத்து நபர்களைக் கொண்ட ஆயுதம் தாங்கிய கோஷ்டியினால் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த 17 'றைபிள்' களும் இயந்திரத் துப்பாக்கியும், சன்னங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. இச்சம்பவத்தின்போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மூன்று கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர். ஒருவரின்நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தின்போது கண்டியைச் சேர்ந்த கான்ஸ்டபிளான ஜெயரத்ன பலியானார் கான்ஸ்டபிள்களான பந்துலசேன, நஸீர், குருசாமி ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதுடன், தொலைபேசி வயர்கள் துண்டிக்கப்பட்டதாகவும், 'வாக்கிரோக்கி' வானொலிக்கருவி சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## பொலிஸ் நிலையத்தில் திகில் சம்பவம்!

### 25 தடவைகள் துப்பாக்கிச்சூடு விழுந்ததாம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துடன் இணைந்துள்ள விடுதியில் சாரத்துடன் படுத்திருந்த கான்ஸ்டபிள் ஜெயரத்ன வெடிச்சத்தம் கேட்டுஎழுந்த சமயம் நெஞ்சில சுடப்பட்டு பலியானார் என்று தெரியவருகிறது.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் நேற்றுக்காலை ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையத்திற்கு சென்று பார்வையிட்டபின் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான ஜெயரத்னவின் சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோனையின் பின்னர் சடலத்தை உரியவரிடம் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சுமார் 10பேர்கொண்ட ஆயுதக்கோஷ்டி யொன்று ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலயத்தை முற்றுகையிட்டு சுமார் 25 தடவைக்கு மேல் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரியவந்துள்ளது.

வெளியிலிருந்து தட்டிய போது யன்னலால் கான்ஸ்டபிள் நஸீர் எட்டிப்பார்த்தாகவும் அப்போது மற்றயன்னல் பக்கத்திலிருந்து அவர் சுடப்பட்டதும் விழுந்துவிட்டாரென்றும் கம்பியால் தெண்டிபின் கதவைஉடைத்து உள்ளே அக்கோஷ்டியினர் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையத்துடன் இணைந்துள்ள விடுதியில் படுத்திருந்த ஜெயரத்தின நெஞ்சில் சுடப்பட்டதாகவும் வாங்கொன்றின் கீழ் கான்ஸ்டபிள் குருசாமி இருந்த போதுவலதுதொடையில்சுடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடந்தபோது விடுதியின் அறையொன்றின் திறப்பு துவாரத்தினூடாக கான்ஸ்டபிள் நாதன் பார்த்துக்கொண்டிருந்ததாகவும், அக்கோஷ்டியினர் பின்பக்கம் வந்தபோது அவர் கட்டிலுக்கு கீழ் பதுங்கியிருந்ததாகவும், அச்சமயம் அவர்கள் கட்டிலுக்குமேல் தடவிப்பார்த்துக் கொண்டுசென்றதாகவும் தெரியவந்துள்ளது.

மற்றொரு கான்ஸ்டபிளான தில்லன்துரையும் கட்டிலுக்குக் கீழே படுத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கோஷ்டியினர் பொலிஸ் நிலையத்திலிருந்த 17 ரைபிள்களையும், இயந்திர துப்பாக்கியையும் சன்னங்களையும் எடுத்துச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸ்நிலைய தொலைபேசி வயர் துண்டிக்கப்பட்டதுடன் கடமைக்கு செல்லும் பொலிஸார், பொலிஸ் நிலயத்

[4ம் பக்கம் பார்க்க]

### வருந்துகிறோம்

தவிர்க்கமுடியாத சூழ்நிலை காரணமாக இன்று மட்டும் 'ஈழநாடு' இதழ் குறைந்த பக்கங்களுடன் வெளிவருகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## 'மினிபஸ்'ஸை கடத்திய ஐந்து நபர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து 'மினிபஸ்'ஸில் சென்ற 5 நபர்கள் ஆனைக்கோட்டை பகுதியில் அம்மன்கோவிலடியில், சாரதியையும், கண்டக்டரையும் துப்பாக்கிமுனையில் காவல்வைத்து மினிபஸ்ஸை கடத்திச்சென்றார்கள் என்று தெரியவருகிறது

மினிபஸ்ஸில் இருந்த பிரயாணிகள் இறங்கியதாகவும், கடைசியாக வயோதிபர் ஒருவர் நாச்சிமார் கோவிலடியில் இறங்கிய பின்னர் 5 நபர்களும் தொடர்ந்து 'மினிபஸ்'ஸில் சென்றதாகவும் கூறப்படுகிறது

அம்மன்கோவிலடியில் சாரதியையும் கண்டக்டரையும் துப்பாக்கியைக்காட்டிப் பயமுறுத்திக் கீழே இறக்கிவிட்டு, இருவரை காவலுக்கு விட்டுவிட்டு மற்றும் மூவரும் பஸ்ஸைக்கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

அரைமணித்தியாலத்தின் பின்னர் சுமார் 10 பேர் துப்பாக்கி ஆயுதங்களுடன் வந்து அங்கிருந்து சென்றார்களென்றும் கூறப்படுகிறது.

சிலமணித்தியாலத்தின் பின்னர் ஒருவர் மட்டும் 'மினிபஸ்'ஸை கொண்டுவந்ததாகவும், அதில் ஒரு சைக்கிளையும்

[4-ம் பக்கம் பார்க்க]

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82,கன்னதிட்டி,(போன்:8310)யாழ்ப்பாணம்.
ரூபா 1000/-க்குமேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வருமானத்தை வழங்குகிறது.
30% வருட முடிவில் வட்டி பெறுவோர்க்குவருடம் 25%வீத வட்டியும் 3%வீத போனஸூம் 2% வீத சேமிப்பும் ஆக மொத்தம் 30% வீத வருமானம் வழங்கப்படும்
28% மாதாமாதம் வட்டி பெறுவோர்க்கு வருடம் 25% வீத வட்டியும் வருட முடிவில் 3% வீத போனஸூம் ஆக மொத்தம் 28% வீத வருமானம் வழங்கப்படும்
இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.
உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.
ஹோம் பினன்ஸ் நம்பிக்கையின் இல்லம்.
தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190

# வரி விளம்பரம்

## நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் 1981

### யாழ். பொலிஸ் (போக்குவரத்துப் பிரிவு)

மேற்கூறப்பட்ட உற்சவத்தையொட்டி, கீழ்க் காணும் வீதிகள் சகல வாகனப்போக்குவரத்துக்கும் 5-8-81 முதல் 30-8-81 வரை (இருநாட்களும் உட்பட) மூடப்படும்.

1. பருத்தித்துறை வீதியின் பகுதியான அரசடி சந்தியிலிருந்து 2ம் கட்டைவரை.
2. கோவில் வீதியின் பகுதியான பண்டாரக்குளம் ஒழுங்கையிலிருந்து சோமசுந்தரம் ஒழுங்கைவரை.
3. செட்டித்தெருவின் பகுதியான பருத்தித்துறை வீதியிலிருந்து செட்டி ஒழுங்கை வரை.

குறிப்பு: இப் பகுதியில் வசிக்கும் தனிப்பட்ட வாகனங்கள் பாவிக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இப் பகுதியில் வாகனங்களில் கடமைக்குச் செல்லும் சகல உத்தியோகத்தர்களுக்கும் கந்தசுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள தற்காலிக பொலிஸ்நிலையத்தில் 5-8-81 முதல் விசேட போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

### வாகனங்கள் திருப்பிவிடல்

சகல வாகன போக்குவரத்து சாரதிகளும் கீழ்க் காணும் வீதிகளை பாவிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

(1) வழமைபோல் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் இருந்து பருத்தித்துறை வீதிவழியாகச் செல்லும் சகல பஸ்களும் ஆனைப்பந்தி சந்தியிலிருந்து திரும்பி நாவலர்வீதி வழியாக செல்லவேண்டும்.

(2) பலாலி வீதியும் அம்மன் வீதியும் சந்திக்கும் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியைச் சந்திக்கும் வரை உள்ள அம்மன் வீதியும், அரசடி சந்தியிலிருந்து கந்தர்மடம் வரையும், அரசடிசந்தியிலிருந்து நாவலர் வீதிவரையுள்ள கைமன் வீதியும், பெருந்திருவிழா நாட்களிலும், உற்சவகாலத்தில் சகல வெள்ளிக் கிழமைகளிலும், ஒற்றைவழிப்பாதையாக இருக்கும்.

### வாகனங்கள் நிறுத்துமிடங்கள்

யாத்திரிகளின் வசதிக்காக, நான்கு வாகனங்கள் நிறுத்துமிடங்கள் கீழ்காணும் இடங்களில் ஒழுங்கு செய்யப்படும். சகலவாகனச்சாரதிகளும் இவற்றை, தங்கள் வாகனங்களை நிறுத்த பாவிக்குமாறு கேட்கப் படுகின்றார்கள்.

1. அரசடி வீதிவழியாக கந்தசுவாமி கோவிலை வந்தடையும் வாகனங்கள் நிறுத்துவதற்காக அம்மன் கோவில் மைதானம்.
2. தெற்குபகுதியால் வரும் வாகனங்கள் நிறுத்துவதற்காக பிள்ளையார் கோவில் மைதானம்.
3. பலாலி வீதி திருநெல்வேலியால் வரும் வாகனங்கள் நிறுத்துவதற்காக முத்திரைச்சந்தி சந்தை மைதானம்.

டி. வீரக்கோன்
உதவி பொலிஸ் அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம் (1)

பொலிஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.
22-7-81.
0453

### விற்பனைக்கு

அராலி மேற்கு வெள்ளைவேலி லடியில் இணியம் புத்திவி என்ற நெல்வயல் பத்துப் பரப் புக்காணி விற்பனைக்கு உண்டு உரிமையாளர்: பொ. கனக சபை கரைப்பிட்டிப்பிள்ளை யார் கோவிலடி, அராலி தெற்கு. 0450

புலோலி தெற்கில் பிரபல்ய மான பகுதியில் நான்கு அறை களைக் கொண்ட நல்ல கல்வீடு வளவு விற்பனைக்குண்டு, காணிக்குள் தனியான கிணறு, இரு பக்கமும் சுற்றுமதில், பிர யோசனமான மரங்கள் நாட் டப்பட்டுள்ளன, காணி அறை ரைப் பரப்பு. வீட்டின் ஒரு அறையில் கிராமசேவையா ளர் காரியாலயம் உண்டு. விபரங்களுக்கு டாக்டர் எஸ். பசுபதிராஜா, மே/பா, சட் டத்தரணி சே. குணரெட்ணம் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை. தொலை பேசி: 216 (0461)

நல்ல இன மூத்திரிகைக் கன்றுகளும் நல்ல இன தென் னங்கன்றுகளும் விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வும்: அன்னுபாம், இணுவில். 0455

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தத் திரு விழாவை முன்னிட்டு கீரிமலை யில் அமைந்திருக்கும் எமது அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் எமது அதியுன்னத தயாரிப்புகளான அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி, அண்ணா தேயிலை, அண்ணா பத்தி, ஜெயந்தி பத்தி, சோமாஸ்கந்தர் புனுகு பவுடர் ஆகிய பொருட்களில் ஏதாவது ஒன்றினை வாங்கி அத்துடன் எமது அரிய, பெரிய இரும் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். 0454

### விற்பனைக்கு

மொறிஸ் 1060 3 ஸ்ரீ 3000 தொடர்பிலக்க கார், பார்வை யிடும் இடம் 7/1 ஓடைலேன் வண்ணார்பண்ணை, யாழ்ப்பா ணம். 0460

### தேவை

எங்கள் ஸ்தாபனத்தில் மொனிற்றன் கொப்பிகள் தைப்பதற்கும், பக்கிங் செய்வ தற்கும் அனுபவம் உள்ள ஆண்களும், யுவதிகளும் தேவைப்படுகின்றனர் றூலிங் மெசினில் வேலை செய்யக்கூடிய வரும், கட்டிங் மெசினில் வேலை செய்யக்கூடியவரும், இரண்டும் தெரிந்த அனுபவ முள்ள ஒருவரும் தேவை நேரில் வரவும் அல்லது விண் ணப்பிக்கவும். உரிமையாளர்: குளோப் இன்டஸ்ரீஸ், சிங்க ளப் பாடசாலை முன்பாக, 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். 0456

நல்ல சுற்றுடலுடன் அமை ந்த வீடு கட்டக்கூடிய காணி தேவை. விபரங்கட்கு: க. தம்பிமுத்து, 268/5, நாவ லர் ரோட், ஆனைப்பந்தி, யாழ் ப்பாணம். 0452

### மாவிட்டபுரம் தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

வரலாற்றுப் பெருமையும், அற்புதமும்நிறைந்த மாவிட்ட புரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்றாகும். ஐந்து தேர்களின் அழகையும் பொலிவையும் கண்டு வழிபட பக்தர்கள் ஆயிரக்கணக்கில் பல ஊர்களில் இருந்தும் திரண்டுவருவார்கள்.

### முதலிலேயே ஆக்கப்படும் பூர்த்தியான கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணமெய்திய இணுவில் மேற்கு கணபதிப்பிள்ளை செல்லத்துரையின் மரண சாதன விடயத்தில்
மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்) டீ/87

கணபதிப்பிள்ளை செல்லத் துரை கைம்பெண் பாக் கியம், இணுவில் மேற்கு. மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு வேலை பெயர் குறிப்பிடப்பட்டவ ரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்ப தற்காக மேற்படி நீதிமன்றத் தில் தொடுக்கப்பட்டுள்ள தெனவும் 1980 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10 ஆம் நாளன்று, அதில் அதற் கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ள தெனவும் இத்தால் அறிவிக் கப்படுகிறது.

1981 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆம் நாள்.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.

க. வைரவநாதன்
மனுதாரரின் பதிவுபெற்ற சட்டத்தரணி 0448

### ஸ்ரீசிவகுருநாத பீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடத் திலிருக்கும் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தின் அதிபதியாக இருந்துவரும் ஸ்ரீமத் நடராஜ ஈசுவரசுவாமி, தமது தேகா சௌகரிய நிலை குன்றியிருப்ப தன் காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்காக இக்குருபீடத்தில் பல ஆண்டு களாக உதவியாளராகக் கடமையாற்றிய ஸ்ரீ செல்லத் துரை சோமாஸ்கந்தனை தமது வாரிசாகவும், பதில் குருபீடாதிபதியாகவும் நியம னம் செய்திருக்கிறார்.

ஸ்ரீ சோமாஸ்கந்தவேள் இம் மாதம் 17ந் திகதியன்று குறித்த பதவியை ஏற்றுக் குரு பீடத்தின் பரிபாலன சபையா ரின் ஆலோசனைக்கு அமை வத் தமது கடமைகளை ஆற்றி வருகின்றார்

### ஜனநாயக விரோத செயல்

சென்னை, ஜூலை, 18

"கோயம்புத்தூரில் பத்தி ரிகை அலுவலகமொன்று அர சியல் கட்சியொன்றினால் தாக் கப்பட்டது ஜனநாயகவிரோத செயலாகும்."

மேற்கண்டவாறு இந்திய குடியரசு கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித் துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்தியா சுதந்திரமடை ந்து 33 ஆண்டுகளாகியும் ஹரிஜனங்கள் தீண்டத்தகாத வர்களாக நடத்தப்படுகின்றார் கள்."

அதே வேளை ராமநாதபுரத் தில் 30 ஹரிஜனக் குடும்பங் கள் நேற்று மதம்மாறியுள் ளன.



## நமது நோக்கு

### திருமணமும் பரபரப்பும்

இன்று லண்டனில் நடைபெறும் இளவரசர் சார்ள்ஸினின் திருமணம் இந்த நூற்றாண்டிலேயே மிகப்பிரசித்திபெற்ற வைபவமென்று பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன.

எங்கள் நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் பாரியார்கள் சகிதமாக வைபவத்திற்குப் போயிருக்கின்றனர். 30,000 ரூபாய் பெறுமதியான திருமணப் பரிசு ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் நாம் அண்டை நாடாகிய இந்தியாவை முந்திநிற்கின்றோம்.

சாதாரண திருமணம் என்றாலே ஒருவித பரபரப்பு குடும்பங்களில் நிலவுவது எங்கள் சமுதாயவழக்கம். எனவே பட்டத்துக்குரிய அரசனும் அவருக்கேற்ற பிரபுக் குடும்பத்தின் டயானா சீமாட்டியும் என்றால் நாகரிக உலகத்தின் கண்கள் இன்று அங்கு நடைபெறும் காட்சிகளிலே கவனம் செலுத்தும்.

அரசனில்லாத ஜனநாயக சோஷலிசநாடு இதுவென்றாலும், ஐ. தே. கட்சி ஆதிகாலந்தொட்டு அரச வம்சத்துக்கு விசுவாசமும் பெருமதிப்பும் கொண்டவர்கள். நாடு சுதந்திரமடைந்த பொழுது, இங்கு நடந்த வைபவத்துக்கு கிளஸ்டர் கோமகனும் அவருடைய கூட்டத்தினரும் எத்தகைய வரவேற்பும் பெற்றனரென்பது நினைவுக்குவருகிறது.

மக்கள் சுதந்திர உணர்வு, அவர்களுக்களித்த குதூகல வரவேற்பில் மழுங்கிப் போய்விட்டது. 33 வருடங்களுக்குப்பின் எங்கள் சுதந்திரம், பொருளாதாரம், ஜனநாயக சோஷலிசம் எவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறதென்பதைமதிக்கும் மைற்கல் இன்றையவைபவம் எனலாம்.

அரசதிருமணவைபவத்தின் பாதுகாப்பு ஒழுங்குகள் மிகத் திறமையுடன் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இருந்தும்இத்தகையநிபுணத்துவம் வாய்ந்த ஒழுங்குகளுக்கு தெய்வமும் உதவ வேண்டுமென பிரிட்டிஷ் அதிகாரிகள் வேண்டுகின்றனர். பயங்கரவாத உலகம் இது.

இன்று பொட்டும் பூவுமின்றி நாட்டின் சமுதாயத்தில் நிரந்தரமிடமற்று நலிவுறும் தமிழ்மக்கள்பழமைமிகுந்த சமுதாயத்தின் பேரில் அரசதம்பதிகள் திருமணம் இனிது நிறைவேற இறைவனைப் பிரார்த்திப்போமாக!

### பயிற்சி

ரேடியோ - டெலிவிசன் ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சிகள் மற்றும் P. M. G. [Radio Officer] பயிற்சி ஆகியன ஆரம்பம் 2-8-81 அனைவரும் சேரலாம். நஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டடம், 11, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 0422

## பொலிசாருக்கு அவசர சத்திர சிகிச்சை

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த கான்ஸ்டபிள் பந்துலசேன, கான்ஸ்டபிள் குருசாமி ஆகியோருக்கு நேற்றுக்காலை யாழ் பெரியாஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்த மற்றொரு கான்ஸ்டபிளான நாச்சிக்குடாவைச்சேர்ந்த நஸீருக்கு நேற்று நண்பகல் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

பெரிய ஆஸ்பத்திரி 6ம்வாட்டில் கான்ஸ்டபிள்கள் குருசாமியும், பந்துலசேனவும், சத்திர சிகிச்சைக்குபின் கொண்டு வரப்பட்டனர்.

குருசாமியின் வலது தொடையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அவர் மயக்கமடைந்த நிலையில் இருக்கிறார். கட்டிலுக்கருகில் அவருடைய 5 பிள்ளைகளும், கண்ணீர் வடித்தபடி நின்றனர்கள். உறவினர்களும் பெருமளவில் கூடியிருந்தனர்.

இவருக்கு எதிருள்ள கட்டிலில் பொலிஸ் சாரதி தந்துலுசேன மயக்கமடைந்தவராய்க் காணப்பட்டார். அவரது வலது கையிலும், நெஞ்சிலும், இடது தோள்பட்டிக்கருகே கட்டுப் போடப்பட்டிருந்து உடையெல்லாம் இரத்தமாக இருந்தது. இடது முகப்பகுதியில் 'நெற்' போடப்பட்டிருந்தது ஆஸ்பத்திரி 6-ம் வாட்டிலும், வாட்டிற்கு வெளியிலும், ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல்புரிந்தனர்.

துப்பாக்கிசூட்டுக்குபலியான மெயரத்தினவின் பிரேத பரிசோதனை நேற்று நண்பகல் நடந்தது.

### தொடர்ந்து றிமாண்ட்

[புலோலி]

துன்னாலைவாலிபர் இராஜகோபால் கொலைச்சந்தேக நபர்கள் மூவரையும் அடுத்த மாதம்6-ம்திகதிவரை தொடர்ந்தும் றிமாண்டில் வைக்குமாறு நீவான் திரு. கே.எஸ்.மகேசன் உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலை அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் கொலைசெய்யப்பட்டு இலைக்கயிற்றில் தூக்கப்பட்டிருந்த இராசா இராஜகோபால் [யப்பான்] என்ற வாலிபரின் கொலைச்சந்தேக நபர்களான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணசிவா ஆகிய மூவரும் மீண்டும் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 6-ம்திகதி வரை தொடர்ந்தும் றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

### மாவையம்பதிக்கு பாதயாத்திரை

[யாழ்ப்பாணம்]

மாவையம்பதி முருகன் ஆலயத் தேர்விழாக்காண நல்லை ஆதீனத்திலிருந்து பாதயாத்திரையாகச் செல்வதற்கு வழமைபோல் ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன. இன்று புதன்கிழமை அதிகாலை 4-00 மணிக்கு நல்லை ஆதீன இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்யஸ்வாமிகள் தலைமையில் பாதயாத்திரை ஆரம்பமாகும். விரும்பும் அன்பர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

### மினி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

அதிகாலை சுமார் மூன்று மணியளவில் மினிபஸ்'ஸை சாரதியிடம்ஒப்படைத்துவிட்டு 3 நபர்களும் சைக்கிளில்சென்றதாகவும் கூறப்படுகிறது.

மினிபஸ் சாரதியும் கண்டக்டரும், சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று புகார் செய்தனர். பின்னர் யாழ். பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்யப்பட்டனர்.

தற்போது இருவரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். [க]

### பொலிஸ்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் தொடர்புகொள்ளும் தொடர்புசாதனமான வாக்கிரோக்கி உடைத்து சேதப்படுத்தப்பட்டதாகவும், தெரியவந்துள்ளது.

ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் சுமார் ஒருமணிநேரத்தின் பின்னர் அங்கிருந்து சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

### 'யோகேஸ்' வீடு எரிப்பு பற்றி...

[கொழும்பு]

''யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்களின் போது யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரனின் இல்லத்தை மட்டும் ஏன் தெரிந்தெடுத்து எரித்தார்கள் என்பதை நான் இங்கு கூற விரும்பவில்லை. அது பற்றி உங்களுக்கே தெரியும்''.

இவ்வாறு உள் நாட்டமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் அண்மையில் பாராளுமன்றத்தில் கூறினார்.



பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் இளம் வாரிசுநாளைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மாமன்னன் மூன்றுவது சார்ள்ஸ் இளவரசர் இன்று டயனாஸ்பென்சர் சீமாட்டியைத் திருமணம் செய்துகொள்கிறார். இளவரசர் தம்பதிகள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

### அனலைதீவு ஐயனார்உற்சவம்

[அனலைதீவு]

அனலைதீவு ஐயனார் கோவில் வருடாந்தஉற்சவம் எதிர்வரும் 1-ம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 14ம் திகதி தேர்த்திருவிழாவும், 15-ம்திகதி தீர்த்தத்திருவிழாவும் அடுத்தநாள் பூங்காவனமும் நடைபெறும்

### வடபிராந்தியபோக்குவரத்துச்சபையின் வெற்றிடம்

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் சுற்றுலா விடுதிக்கு ஒரு காவற்பொறுப்பாளர் தேவை. விண்ணப்பதாரர் ஆண்களாகவும் சுற்றுலா விடுதியை நன்கு பேணி, அங்கு வருபவர்களுக்கு உணவு செய்து கொடுக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். கல்வித் தகமை தரம்8 சித்தியடைந்திருக்கவேண்டும். சம்பளம் ரூபா 225/- 5×5, 10×12-370/- என்ற விகிதம் வயது 25ற்கும் 40ற்கும் இடைப்பட்டிருக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 05-08-81. வாடி வீடுகள், அங்கீகரிக்கப்பட்ட விடுதிச்சாலைகளில் 3வருடத்திற்கு குறையாத சேவை செய்த அனுபவம் இருப்பவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனை செய்யப்படும்.

ஆளணி முகாமையாளர்,
வடபிராந்திய போக்குவரத்துச்சபை.
4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம் 0463




பூரண பாதுகாப்பினை உறுதிப்படுத்துங்கள்

யூனியன் மடியுங் கேற்றுகளை திறந்தவையும் மறைவானவையும்



தொழிற்சாலைகள், பண்டகசாலைகள் வாகன கராஜ்கள், வங்கிகள், வர்த்தக தாபனங்கள், கடைகள், நகைக்கடைகள் இதர கட்டிடங்கள் அனைத்துக்கும் பூரண பாதுகாப்புஅளிக்கவரும்இன்றியமையாத இரும்புலது யூனியன் மடியுங்கேற்றுகளே

10 அடி (சுமார் 3 மீ) உயரமும் எவ்வளவு அகலமுமான எந்த நீள்சதுர வாசலுக்குமேற்ப யூனியன் மடியுங்கேற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ற வேலைத்திட்டங்களும், விலை விபரமும் நீங்கள் விண்ணப்பித்தால் அனுப்பிவைக்கப்படும்.

உற்பத்தியாளரும் விற்பனை செய்பவர்கள்
சாமுவெல் சன்ஸ் அண்ட கம்பனி லிமிட்டெட்
த. பெ. எண் 46, 371, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12. டெலிபோன் 32341 (4 லைன்கள்)

கிளை: 206/208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் டெலிபோன்: 462, யாழ்ப்பாணம்

Grant, K & E 4021


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 981ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka
Regd No QR 100286/81, P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126